கொள்வனவு	1,832,714.50	396,250.00
நேர் சம்பளம்	-	-
போக்குவரத்து	-	26,300.00
இருப்பு சேதம்	-	(265,000.00)
இறுதி இருப்பு - மூலப்பொருள்	(842,150.00)	(6,555.00)
	1,262,119.50	633,769.50
ஆரம்ப இருப்பு - குறைவேலை	-	-
இறுதி இருப்பு - குறைவேலை	-	-
உற்பத்திச் செலவு	1,262,119.50	633,769.50

விற்பனை வருமானம்	**922,260.00**	**773,995.35**
கழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	68,394.08	295,460.00
உற்பத்திச் செலவு	1,262,119.50	633,769.50
	1,330,513.58	929,229.50
இருப்பு சேதம்	-	(67,797.62)
இறுதி இருப்பு	(56,266.06)	(596.46)
	1,274,247.52	860,835.42
மொத்த இலாபம்/நட்டம்	**(351,987.52)**	**(86,840.07)**
மேந்தலைச் செலவுகள்	(1,039,062.89)	(1,570,957.20)
தேறிய இலாபம்/நட்டம்	**(1,391,050.41)**	**(1,657,797.27)**

2.10 கொம்போஸ்ட் செயற்றிட்டம் - புத்தல
31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2017** ரூ.	**2016** ரூ.
ஆரம்ப இருப்பு	234,349.80	-
கொள்வனவு	1,536,260.68	946,553.60
நேர் சம்பளம்	-	-
போக்குவரத்து	-	-
இறுதி இருப்பு - மூலப்பொருள்	(356,342.20)	(234,349.80)
	1,414,268.28	712,203.80
ஆரம்ப இருப்பு - குறைவேலை	-	-
இறுதி இருப்பு - குறைவேலை	-	-
உற்பத்திச் செலவு	1,414,268.28	712,203.80
விற்பனை வருமானம்	**1,612,750.00**	**916,206.25**
கழி: விற்பனைக் கிரயம்		

ஆரம்ப இருப்பு	-	-
உற்பத்திச் செலவு	1,414,268.28	712,203.80
இறுதி இருப்பு	-	-
	1,414,268.28	**712,203.80**
மொத்த இலாபம்/நட்டம்	**198,481.72**	**204,002.45**
மேந்தலைச் செலவுகள்	(256,247.00)	(147,408.90)
தேறிய இலாபம்/நட்டம்	**(57,765.28)**	**56,593.55**

2.11 பாரம்பரிய அரிசி செயற்றிட்டம்

31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2017** ரூ.	**2016** ரூ.
ஆரம்ப இருப்பு	854,895.00	313,509.00
கொள்வனவு	424,843.55	5,559,276.40
போக்குவரத்து	-	33,915.00
அரைத்தல் செலவு	-	124,380.00
நேர் சம்பளம்	-	659,448.00
இருப்பு சேதம்	-	(732,375.00)
இறுதி இருப்பு	-	(122,520.00)
	1,279,738.55	5,835,633.40
ஆரம்ப இருப்பு - குறைவேலை	1,013,841.00	-
இருப்பு சேதம்	-	(1,013,841.00)
இறுதி இருப்பு - குறைவேலை	-	-
உற்பத்திச் செலவு	2,293,579.55	4,821,792.40
விற்பனை வருமானம்	**1,936,915.00**	**4,467,445.00**
கழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	1,097,800.00	156,950.00
உற்பத்திச் செலவு	2,293,579.55	4,821,792.40
	3,391,379.55	4,978,742.40
இருப்பு சேதம்	-	(1,029,860.00)
இறுதி இருப்பு	-	

		(67,940.00)
	3,391,379.55	3,880,942.40
மொத்த இலாபம்/நட்டம்	**(1,454,464.55)**	**586,502.60**
மேந்தலைச் செலவுகள்	(1,531,660.91)	(167,822.40)
தேறிய இலாபம்/நட்டம்	**(2,986,125.46)**	**418,680.20**

2.12 **புத்தல பண்ணை**

31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2017** ரூ.	**2016** ரூ.
ஆரம்ப இருப்பு	-	-
கொள்வனவு		3,575.00
இறுதி இருப்பு - மூலப்பொருள்	-	-
	-	3,575.00
ஆரம்ப இருப்பு - குறைவேலை	-	-
இறுதி இருப்பு - குறைவேலை	-	-
உற்பத்திச் செலவு	-	3,575.00
விற்பனை வருமானம்	**9,201.00**	**4,000.00**
கழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	-	-
உற்பத்திச் செலவு	-	3,575.00
இறுதி இருப்பு	-	-
	-	**3,575.00**
மொத்த இலாபம்/நட்டம்	**9,201.00**	**425.00**
மேந்தலைச் செலவுகள்	525,407.80	542,637.75
தேறிய இலாபம்/நட்டம்	**(516,206.80)**	**(542,212.75)**

தணமல்வில பண்ணை

2.13

31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	2017 ரூ.	2016 ரூ.
பண்ணை வருமானம்	**155,000.00**	**128,000.00**
தழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு		
உற்பத்திச் செலவு	-	-
இறுதி இருப்பு	-	-
	-	**-**
மொத்த இலாபம்/நட்டம்	**155,000.00**	**128,000.00**
மேந்தலைச் செலவுகள்	(483,239.76)	(655,412.52)
தேறிய இலாபம்/ நட்டம்	**(328,239.76)**	**(527,412.52)**

2.14 **சோயா செயற்றிட்டம்**

31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	2017 ரூ.	2016 ரூ.
விற்பனை வருமானம்	**75,404,780.00**	**-**
தழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	8,631,729.50	-
கொள்வனவு	72,656,438.72	8,574,519.50
பொதியிடல்	116,301.00	72,756.68
இருப்பு பதனிடல் கட்டணம்	439,757.50	90,258.10
தூமமூட்டல் செலவு	109,983.75	55,140.00
இருப்பு சேதம்	-	-

இறுதி இருப்பு	(10,130,705.00)	(8,631,729.50)
	71,823,505.47	**160,944.78**
மொத்த இலாபம்/நட்டம்	**3,581,274.53**	**(160,944.78)**
மேந்தலைச் செலவுகள்	(1,284,839.70)	**-**
தேறிய இலாபம்/நட்டம்	**2,296,434.83**	**-**

2.15 உள்;ர் சோளம் கொள்வனவு செயற்றிட்டம்
31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2017** ரூ.	**2016** ரூ.
விற்பனை வருமானம்	**13,860.00**	**16,137,660.00**
கழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	56,551.00	
கொள்வனவு	-	15,189,871.25
போக்குவரத்து	-	115,000.00
பொதியிடல்	-	132,812.50
இருப்பு சேதம்	-	(56,551.00)
இறுதி இருப்பு	-	
	56,551.00	**15,381,132.75**
மொத்த இலாபம்/நட்டம்	**(42,691.00)**	**756,527.25**
மேந்தலைச் செலவுகள்	**-**	(638,345.69)
தேறிய இலாபம்/நட்டம்	**(42,691.00)**	**118,181.56**

2.16 BFN செயற்றிட்டம்

31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	2017 ரூ.
விற்பனை வருமானம்	**106,500.00**
<u>கழி</u>: விற்பனைக் கிரயம்	
ஆரம்ப இருப்பு	-
கொள்வனவு	54,480.00
போக்குவரத்து	**-**
இருப்பு சேதம்	**-**
இறுதி இருப்பு	(420.00)
	54,060.00
மொத்த இலாபம்/நட்டம்	**52,440.00**
மேந்தலைச் செலவுகள்	180,272.55
தேறிய இலாபம்/நட்டம்	**(127,832.55)**

2.17

சோளம் (இறக்குமதி) செயற்றிட்டம்

31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2017** ரூ.
விற்பனை வருமானம்	**1,754,284,010.64**
<u>கழி</u>: விற்பனைக் கிரயம்	
ஆரம்ப இருப்பு	-
கொள்வனவு	1,718,240,745.73
போக்குவரத்து	-
பொதியிடல்	61,027.27
இருப்பு சேதம்	-
இறுதி இருப்பு	-
	1,718,301,773.00
மொத்த இலாபம்/நட்டம்	**35,982,237.64**
மேந்தலைச் செலவுகள்	895,090.74
தேறிய இலாபம்/நட்டம்	**35,087,146.90**

குறிப்பு **02** – வியாபார, இலாப/ நட்டக் கணக்கு(**பொழிப்பு)**

செயற்றிட்டம்	**2017**		**2016**	
	மொத்த இலாபம்/(நட்டம்)	தேறிய இலாபம்/(நட்டம்)	மொத்த இலாபம்/(நட்டம்)	தேறிய இலாபம்/(நட்டம்)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
தெகிவளை விற்பனைக்கூடம்	4,851,192.53	(1,669,600.01)	4,752,868.26	(475,094.94)
உணவகம் - தெகிவளை	924,044.50	198,303.30	237,362.86	(336,326.90)
உணவகம் - மிருககாட்சிசாலை தெகிவளை	1,098,731.90	(159,344.60)	2,199,269.92	1,056,786.18
கன்றுகள் விற்பனைக்கூடம் - நாரஹேன்பிட்டி	3,450,681.47	1,536,790.28	3,276,431.11	1,465,467.17
கன்றுகள் விற்பனைக்கூடம் - தெகிவளை	1,676,683.72	612,733.62	2,233,701.98	1,309,431.58
அரிசி மா செயற்றிட்டம் - கலன்குட்டிய	34,868.04	(420,512.16)	(87,695.48)	(2,226,394.12)
சுவபோஷ செயற்றிட்டம்	84,937.15	(355,398.55)	(96,486.15)	(739,108.55)
ஹெல்தி புட் உணவகம் - நாரஹேன்பிட்டி	(671,946.62)	(894,109.41)	(2,843,868.09)	(3,812,515.94)
மவ்போஷ செயற்றிட்டம்	(351,987.52)	(1,391,050.41)	(86,840.07)	(1,657,797.27)
புத்தல கொம்போஸ்ட்	198,481.72	(57,765.28)	204,002.45	56,593.55
பாரம்பரிய அரிசி செயற்றிட்டம்	(1,454,464.55)	(2,986,125.46)	586,502.60	418,680.20
புத்தல பண்ணை	9,201.00	(516,206.80)	425.00	(542,212.75)
தணமல்வில பண்ணை	155,000.00	(328,239.76)	128,000.00	(527,412.52)
சோயா செயற்றிட்டம்	3,581,274.53	2,296,434.83	(160,944.78)	-
உள்;ர் சோளம் கொள்வனவு செயற்றிட்டம்	(42,691.00)	(42,691.00)	756,527.25	118,181.56
BFN செயற்றிட்டம்	52,440.00	(127,832.55)	-	-
சோளம் (இறக்குமதி) செயற்றிட்டம்	35,982,237.64	35,087,146.90	-	-
பாசிப் பயறு செயற்றிட்டம்	-	-	275,675.00	
ஹெல்தி புட் பசார்	-	-	150,123.63	-
மொத்தம்	**49,578,684.51**	**30,782,532.94**	**11,525,055.49**	**(5,891,722.75)**

03 நேர் அபிவிருத்தி செலவினம் மானியங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

04 பிரதான அலுவலக நிருவாகம் பொருட்டு உறப்பட்ட சகல செலவினங்களும் திறைசேரி நிதியங்களின் கீழ் உறப்பட்டுள்ளன.

05 திறைசேரி நிதியங்கள்

விபரம்	வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு	2017 உண்மையான செலவினம்	2017இல் திறைசேரியிடம் இருந்து பெற்ற நிதியேற்பாடு	மிகை/குறைவு
மீண்டுவரும்	61,702,155.00	47,601,770.36	40,000,000.00	21,702,155.00
மூலதன	2,800,000.00	2,830,250.00	2,800,000.00	-
			42,800,000.00	

06 செயற்றிட்டங்கள் பொருட்டு கமத்தொழில் அமைச்சிடமிருந்து பெற்ற நிதியம் பின்வருமாறு மீண்டுவரும், மூலதன செலவினங்களாக பயன்படுத்தப்பட்டன.

விபரம்	மூலதன	மீண்டுவரும்	மொத்தம்
செயற்றிட்டம்	108,050.00	4,532,882.42	4,640,932.42
			4,640,932.42

திறைசேரி நிதியேற்பாடு (மீண்டுவரும்)	40,000,000.00
அமைச்சு நிதியேற்பாடு	982,233.50
உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்	3,550,648.92
	44,532,882.42

07. அம்பலாந்தோட்டை பண்ணையில் அமைக்கப்பட்ட வேலி பொருட்டு செலுத்தப்படவுள்ள ரூ.3,209,728.53 தொகை தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR 02401-13 எனும் வழக்கு இலக்கத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

08. சிறிய குளங்கள் அபிவிருத்தி செயற்றிட்டம் பொருட்டு மண் விற்பதன்மூலம் ரூ. 72,975,100.00 தொகை கிடைத்ததுடன் அது வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அத்துடன், செயற்றிட்டமானது இதுவரையில் முடிவுறுத்தப்படாமையினால் ரூ.1,445,668.16 செலவுத் தொகை முன்கொண்டு செல்லப்பட்டது.

09. தெகிவளை விற்பனைக்கூடம் மற்றும் தெகிவளை மிருககாட்சிசாலை விற்பனைக்கூட கணக்குகள் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளன.

10. கடந்த ஆண்டுகள் பூராகவும் காணப்பட்ட பின்வரும் மீதிகள் பதிவழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- நெல் சந்தைபடுத்தும் சபைக்கு செலுத்த வேண்டிய ரூ.3,300,000.00
- தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய ரூ.7,800.00
- கமத்தொழில் அமைச்சுக்கு செலுத்த வேண்டிய ரூ.15,000.00
- எஸ்.கே.தம்மிக சொலமன் என்பவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ.64,500.00 அத்துடன் குமுதினி குணசேகர என்பவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ.127,303.00.

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை -2017

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No.: ஏஜீஎல்/டீ/எச்சீபீ/01/17/17
මබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2017 ஜுலை 19

FFHC BOARD
13 SEP 2018
No. 65 Kirimandala Mw., Narahenpita.

தலைவர்,
இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சபை,

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை பட்டினி ஒழிப்பு இயக்க சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இலக்க சபைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2018 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

2

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இறக்குமதி செய்திருந்த 237,937 கிலோகிராம் சோளத்திற்காக 2017 திசெம்பர் 31 திகதியில உள்ளவாறு தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 11,773,265 தொகை செலுத்த வேண்டியிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 11,163,064 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 610,201 இனால் குறைவாகவும் மற்றும் மிகை அதே தொகையால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொதி செய்யும் பொருட்களின் பௌதீக இருப்பு பெறுமதி ரூபா 192,404 தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால் மீளாய்வாண்டிற்கான பொதி செய்யும் பொருட்களின் இருப்பு மற்றும் மிகை அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(இ) அரிசி குத்தும் மற்றும் உயர்த்தும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முற்பணமாகச் செலுத்தியிருந்த ரூபா 4,821,030 இற்கான தொகை முற்பணம் என கணக்கீடு செய்வதற்குப் பதிலாக சொத்துக்கள் என கணக்கீடு செய்திருந்தமையால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சொத்துக்களின் கிரயம் அதே தொகையால் மற்றும் பெறுமானத்தேய்வு ரூபா 2,642 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் சோயா அவரை இறுதி இருப்பு ரூபா 9,442,810 தொகை மற்றும் பௌதீக இருப்பு மெய்மையாய்தல் அறிக்கையின் பிரகாரம் அது ரூபா 10,130,705 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 687,895 இற்கான விளக்கமளிக்கப்படாத வித்தியாசமொன்று காணப்பட்டது.

2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 மற்றும் 2012 ஆண்டுகள் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 691,211 தொகைக்கான கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் விவசாய நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் போது பெற்றிருந்த ரூபா 2,500,000 இற்கான கடன் தொகை 2013 ஆண்டின் போது செலுத்தி முடிக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மேலும் ரூபா 401,315 தொகை வட்டி உட்பட ரூபா 2,101,315 இற்கான கடன் மீதி ஒன்றினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2 வருடங்களை விட கூடிய காலம் முதல் காணப்படும் ரூபா 410,293 இற்கான கடன்கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

5

2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு	**இணக்கமின்மைகள்**
(அ) 2015 ஜூலை 14 ஆம் திகதிய 3/2015 இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை	(i) வழங்கப்பட்ட விடயம் முடிவடைந்த உடனேயே நிமித்தத் துணைக் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது 46 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 676,400 தொகையான கட்டு நிதிகள் 32 நாட்கள் முதல் 210 நாட்கள் காலம் தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. அதே போல், அரச பணத்தை கையில் தடுத்து வைத்து தாமதித்து தீர்த்தல் மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு தொடர்ச்சியாக நிமித்த கட்டுநிதி வழங்கியிருந்ததுடன், பெற்றிருந்த துணைக் கட்டுநிதியை தீர்ப்பதற்கு முன்னர் கட்டுநிதியொன்று பெற்றிருந்த 117 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
	(ii) 09 சந்தர்ப்பங்களில் 05 உத்தியோகத்தர்களினால் நிமித்தக் கட்டுநிதியாக ரூபா 164,000 தொகை பெற்று விடயத்தை நிறைவேற்றாமல் 72 நாட்கள் முதல் 168 நாட்கள் வரையான காலவீச்சொன்று பணம் கையில் தடுத்து வைக்கப்பட்டு திருப்பி தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 21 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைகள் இலக்கம் 02/2017 இன் பிரகாரம்	பதிவுசெய்துள்ள உரிமை காணப்படாத பயன்படுத்தப்படும் வாகனங்களின் பதிவு செய்தல் உரிமையுள்ள நிறுவனத்தின் இணக்கத்துடன் சபையின் பேரில் முறைப்படி பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் சபையினால் விவசாய அமைச்சுக்கு சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் மகாவலி அதிகார சபைக்கு, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மேன்படுத்தல் சபைக்கு மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு சொந்தமான 03 வாகனங்கள் அவ்வாறு சபையின் பேரில் பதிவு செய்து கொள்ளாமல் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 37,472,381 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,343,342 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 39,815,723 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது போக்குவரத்து தொடர்பாடல், பயன்பாடு மற்றும் ஏனைய சேவைகளின் செலவு ரூபா 16,860,155 இனால் குறைவடைதல் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட சோள செயற்திட்டத்தின் மூலம் ரூபா 35,087,146 இற்கான வருமானம் ஒன்றினை பெற்றிருத்தல் மேற்கூறிய நிதி விளைவுகளின் வளர்ச்சிக்கு முக்கியமாகப் பாதித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 5,077,456 இற்கான பற்றாக்குறை ஒன்றினை பெற்றிருந்த போதிலும், 2014 ஆண்டின் போது ரூபா 1,921,514 இற்கான மிகையொன்று ஏற்பட்டிருந்தது. அவ்வாறு 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் மீண்டும் பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மீண்டும் ரூபா 37,472,381 இற்கான மிகை ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் அதன் வளர்ச்சி 1950 சதவீதமாகும். எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும்

நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 17,172,617 தொகைக்கான பங்களிப்பு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 79,677,384 தொகை வரை இடையறாது வளர்ச்சியடைந்திருந்தது.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நடைமுறை விகிதாசாரம் ஒன்றினால் குறைவடைந்திருந்ததுடன், செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 82,175,150 இனால் அதிகரித்திருந்தல் அதற்கு முக்கியமான காரணமாகியுள்ளது.

3.3 சபைக்கு எதிராக ஆரம்பித்துள்ள சட்ட சம்பவங்கள்

2012 ஆண்டின் போது சபைக்கு சட்டரீதியான உரிமை ஒன்று காணப்படாத காணி ஒன்றின் வேலி ஒன்று நிறுவுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி மற்றும் பெறுகைகள் நடைமுறைக்கு புறம்பாக வழங்கியிருந்த ஒப்பந்த வேலை ஒன்றிற்காக ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தாமையின் காரணத்தினால் ரூபா 3,209,728 இற்கான நட்டஈடு ஒன்று கோரி சபைக்கு எதிராக வெளிசாரார் ஒருவரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

4.1.1 செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு

சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 3,713.24 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 14 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனமல்வில விவசாயப் பண்ணை மற்றும் புத்தள விவசாயப் பண்ணை

முறையே 16 ஏக்கர்களை மற்றும் 10 ஏக்கர்களைக் கொண்ட தனமல்வில மற்றும் புத்தள விவசாய பண்ணைக்குரிய காணிகளை மீளாய்வாண்டு இறுதி

வரை ஆக்கபூர்வமான பயிர்செய்கை விடயங்களுக்காக பயன்படுத்தி இருக்கவில்லை.

(ஆ) பழங்களின் நுகர்வினை உயர்துவதற்கான செயற்திட்டம் (BFN)

உள்நாட்டில் பற்றாக்குறையாகவுள்ள பழங்களுக்கு பெறுமதியினை கூட்டி நுகர்வோருக்கு வழங்குவதற்கு மற்றும் உள்நாட்டு பழங்களின் நுகர்வினை உயர்த்தும் குறிக்கோளுடன் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது 3,600 பான போத்தல்கள் உற்பத்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 1420 தொகை போத்தல்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(இ) மவ்போஷ செயற்திட்டம் மற்றும் பாரம்பரிய அரிசி செயற்திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 4,000 மவ் போஷ பக்கட்கள் மற்றும் 48,000 அரசி மா பக்கட்கள் உற்பத்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் முறையே 1685 பக்கட்கள் மற்றும் 1316 பக்கட்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. கேள்வியினை இனங்கண்டு முறைசார் விதமாக திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு மவ்போஷ செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 842,150 தொகை பெறுமதியான மூலப்பொருள் இருப்பு மற்றும் அரசி செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 192,404 தொகை பெறுமதியான பொதி செய்யும் பண்டங்களின் இருப்பு மீதியாகக் காணப்பட்டது.

(ஈ) ஹெல பொஜுன் ஹல

2017 நவம்பர் 17 திகதி ஹெல பொஜுன் ஹல ஆரம்பிக்கப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சிறு குளங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

உயர் வலய குளங்களை ஆளமாக்கி தயாரிக்கும் செயற்திட்டம் தொடர்பான செயற்திட்ட அறிக்கைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்டத்தனை செயற்படுத்தியிருந்ததுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது 36 குளங்கள்

அபிவிருத்தி எதிர்ப்பார்த்த போதிலும் 27 குளங்கள் மாத்திரம் ஆழமாக்கப்பட்டிருந்தன.

(ஊ) செயற்திட்டத்தின் பிரகாரம், நச்சுக்கள் இன்றிய உணவு பொருட்களை நாடு பூராகவும் விஸ்தரிக்கும் குறிக்கோளுடன் வீதி உணவு பயன்பாட்டினை முறைப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 72.10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆரம்ப கட்டமாக அனுராதபுர மாவட்டத்தில் 100 வீதி உணவு உற்பத்தி வண்டிகள் ஆரம்பிப்பதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அவ் விடயம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

4.2 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் பதிவு செய்திருந்த சிறு வியாபாரிகளின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக ஹெல்தி புட் விற்பனை சந்தையொன்று 2016 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக பெறுகைகள் வழிகாட்டல்களை கடைபிடிக்காமல் வெளிசாரார் ஒருவரை தெரிவு செய்து உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் v ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு தடவையில் விற்பனை செய்வதற்காக பெற்றுக்கொள்ளக் கூடிய உற்பத்திப் பொருட்களின் உச்ச மட்ட பெறுமதி ரூபா 5 இலட்சம் மாத்திரமாகுமெனினும் அந்த வரையறையை மிகைத்து ரூபா 1,966,824 இற்கான உற்பத்தி பொருட்கள் வழங்கப்பட்டிருந்தது. மேலும் VI ஆம் பிரிவின் பிரகாரம் விற்பனவுகள் தொடர்பான பணம் 15 நாட்களுக்குள் கிடைக்க வேண்டுமெனினும் குறிப்பிட்ட பணம் கிடைக்காதிருந்த போதிலும் தொடர்ந்தும் சபையினால் அந்த சாராருக்கு உற்பத்திப் பொருட்களை வழங்கியிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 590,919 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், எை ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மிகை விதிப்பினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது ரூபா 375,905 தொகை பெறுமதியான உணவ உற்பத்திப் பொருட்களை திருப்பி ஒப்படைத்திருந்த காரணத்தினால் அதே தொகையால் சபைக்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) நச்சுக்கள் இன்றிய பாரம்பரிய உள்நாட்டு உணவுகளை நுகரும் அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தும் குறிக்கோளுடன் 2012 ஆண்டின் போது

ஆரம்பிக்கப்பட்டிருந்த ஹெல்தி புட் உணவகத்தின் 2012 ஆண்டின் போது ரூபா 406,765 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்த போதிலும் 2015 ஆண்டு இறுதியளவில் ரூபா 4,192,533 வரை நட்டம் அதிகரித்திருந்தது. அதன் பின்னர் கட்டம் படிப்படியாக குறைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 894,109 ஆக இருந்தது. 2017 மார்ச் மாதத்தில் இருந்து நட்டத்தை குறைப்பதற்காக இலக்குகள் கொண்ட வேலைத் திட்டமொன்று தயாரிக்கும் படி பணிப்பாளர் சபையினால் தலைவருக்கு அறிவித்திருந்த போதிலும் அதற்கு முரணாக முன்னைய தலைவர் மற்றும் உப தலைவரினால் உணவகத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தக் கூடிய சொத்துக்கள்

தெஹிவளை விற்பனை நிலையத்தில் பேக்கரி ஒன்று நடாத்துவதற்காக 2012 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 452,000 தொகை பெறுமதியான உபகரணங்களை பயன்படுத்தாமல் களஞ்சியத்தில் செயற்படாது காணப்பட்டது.

4.4 பதவியணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 28 ஆக இருந்த போதிலும் 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் 37 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்த காரணத்தினால் உள்ளவாறான 65 தொகையாக காணப்பட்டது. இந்த பதவியணியை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம், 2014 நவம்பர் 12 திகதியின் பின்னர் தற்காலிக, அமைய, பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட வேண்டியது முகாமைத்துவச் சேவை திணைக்களத்தில் பூர்வாங்க அங்கீகாரித்த பின்னர் எனவும் அதற்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் 03 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 798,566 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

5. நீண்டு நிலைக்கக் கூடிய அபிவிருத்தி

நீண்டு நிலைக்கக் கூடிய அபிவிருத்தி குறிக்கோள்கள் நெருங்குதல்

நீண்டு நிலைக்கக் கூடிய அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு "நிகழ்ச்சி நிரல்" இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு தொடர்பாக சபையினால் தமது செயல் நோக்கின் கீழ் வரக்கூடிய கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என அறிந்து நீண்டு நிலைக்கக் கூடிய அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகள் திட்டத்தில் அல்லது மூலதனச் செலவு மதிப்பீட்டில் உட்படுத்தப்பட்டிரக்காத ரூபா 802,500 இற்கான 03 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ரூபா 148,672 இற்கான உலகலாவிய நுழைவு முறைமை (Global Processing System) 02 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் ரூபா 4,821,030 இற்கான செலவில் அரிசி குத்தும் இயந்திரம் மற்றும் உயர்த்தும் உபகரணம் மற்றும் மின் பொருத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 50,000 தொகை செலவிடப்பட்டு விளைச்சலின் பின்னரான தொழிநுட்ப நிறுவனத்தின் மூலம் முன் சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அவ் அறிக்கையின் மூலம் 8 வழங்குனர்கள் பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும், 3 வழங்குனர்களிடம் மாத்திரம் மற்றும் அதற்கு புறம்பாக 05 வழங்குனர்களிடம் விலைகூறல் அழைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 6.2.2 இன் பிரகாரம் சந்தை விலை நிர்ணய முறையின் கீழ் விலைகூறல் அழைப்பதற்கு 07 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமெனினும் சபையினால் 05 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பிரிவு 8.9.1 இன்

பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வழங்குனருடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளல் மற்றும் 5.4.10 பிரிவின் பிரகாரம் செயலாற்றுகை பிணை முறியொன்று பெற்றுக்கொள்ளல் நடைபெற்றிருக்கவில்லை.

(இ) விலங்கு உணவுகளை உற்பத்தி செய்யும் சிறிய மற்றும் மத்திய அளவான வர்த்தகங்களுக்கு அத்தியவசியமான சோளம் உயர்ந்த விலையில் விற்பனை செய்வதை கட்டுப்படுத்தும் குறிக்கோளுடன் மற்றும் சந்தையில் காணப்படும் சோளம் கிராக்கியின் காரணமாக சபையினால் சோளத்தை இறக்குமதி செய்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2017 ஆண்டிற்கான 50,000 மெற்றிக் தொன் சோளம் இறக்குமதி செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.3.1(அ) ஆம் பந்தியின் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்திருக்கவில்லை.

(ii) 2006 பெறுகைகள் கைநூலில் 2.8.2 ஆம் பிரிவின் பிரகாரம் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவுக்காக குறைந்த அளவு 5 அங்கத்தவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமெனினும் பெறுகைகள் குழுத் தலைவரினால் மூவர் மாத்திரம் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

(iii) தெரிவு செய்யப்பட்ட விலைகூறல் தாரரின் விலையின் பிரகாரம், இறக்குமதி செய்வதற்காக விலைகூறல் அழைக்கப்பட்டிருந்த சோளம் இருப்பில் பெறுமதி ரூபா 2,474 மில்லினாக காணப்பட்டமையால் 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிண்ணினைப்பு 28 இல் 2.14.1 பிரிவின் பிரகாரம் வழங்குனர்களைத் தெரிவு செய்வதற்காக தேசிய மட்டத்தில் போட்டி அடிப்படையிலான விலைகூறல் அழைப்பு ஒன்றின் மூலம் விலைகூறல் வெளிப்படுத்தப்பட வேண்டுமெனினும் அதற்கு இணங்காத முறையில் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் விலைகூறல்கள் அழைக்கப்பட்டிருந்தன. மேலும், ரூபா 200 மில்லியனை விட கூடிய வழங்கல்களுக்காக அமைச்சரவை பெறுகைகள் குழு ஒன்றின் மூலம் தீர்மானம் எடுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனினும் அதற்கு முரணாக மேற்கூறிய வழங்கள் திணைக்களத்தின் சிறு அளவிலான பெறுகைகள் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.4.10 பிரிவின் பிரகாரம் மற்றும் வழங்குனர்களுக்கு அனுப்பியிருந்த விலைகூறல் ஆவணங்களில் உள்ளடங்கியுள்ள நிபந்தனை இலக்கம் 10 இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றுகை பிணை முறி சமர்ப்பித்திருக்காததுடன் வழங்குனர்களின் நிதி சாத்தியக்கூறுகளில் உறுதிப்படுத்தப்பட்டதற்கான சான்றுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(v) கூறுவிலைகளை திறத்தல், கூறுவிலை திறக்கும் குழுவினால் 2017 ஜனவரி 24 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்கு முன்னர் சபை தலைவரின் 2016 நவம்பர் 25 திகதிய கடிதத்தின் மூலம் 50,000 மெற்றிக் தொன்கள், ஒரு கிலோ ரூபா 44 வீதம் இறக்குமதி செய்வதற்காக ஒப்பந்த வேலை வழங்கப்பட்டுள்ள வழங்குனருக்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்கூறிய கட்டளையின் பின்னர் விலைகளை வித்தியாசப்படுத்துவதற்கான காரணங்கள் ஏதும் காட்டப்படாமல் மீண்டும் 2017 ஜனவரி 09 திகதிய PD/16/M-Import கடிதத்தின் மூலம் 25,000 மெற்றிக் தொன்கள் கிலோ ஒன்று 49.485 வீதம் கட்டளை இடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், கூறுவிலை அழைப்பதற்கு முன்னர் கட்டளைகளை ஒப்படைத்திருந்த காரணத்தினால் மேற்கூறிய பெறுகைகள் செயற்பாடு வெளிப்படையான தன்மை இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(vi) வழங்குனருடன் மேற்கொண்டிருந்த திகதியிடப்படாத உடன்படிக்கையின் பிரகாரம் 2017 மார்ச் 31 திகதியளவில் மொத்தத் தொகையில் 25,000 மெற்றிக் தொன்கள் இறக்குமதி செய்ய வேண்டுமென வழங்குனருக்கு அறிவித்திருந்த போதிலும், 2017 மே 31 திகதி வரை 10 சதவீதம் எனப்படும் 2,500 மெற்றிக் தொன்கள் மாத்திரம் இறக்குமதி செய்திருந்தமையால் உரிய வியாபாரிகளுக்கு இருப்புக்கள் வழங்குவதற்கு முடியாதிருந்ததுடன் அதன் பிரகாரம் இருப்புக்கள் இறக்குமதி செய்ததன் குறிக்கோள் நிறைவேற்றப்படல் தொடர்பாக கணக்காய்வில் சந்தேகமாகக் காணப்படுகின்றது.

(vii) சோளம் இருப்பில் காணப்பட்ட வேண்டிய நியமம் தொடர்பாக விலைகூறல் அழைப்பு ஆவணங்களில் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் இருப்புக்கள் பெற்ற பின்னர் சபையினால் அவ் இருப்புக்களின் தரப் பரிசோதனைக்கு ஆளாக்கி வியாபாரிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை

AGDSL Auditor General's Department

எடுத்திருக்காததுடன் நேரடியாகவே வழங்குனர்களினால் மொத்த விற்பனையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. விலை கோரல் ஆவணங்களின் பிரகாரம் விவரக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இருப்புக்களில் காணப்பட வேண்டிய உச்சமட்ட அபெல்டொக்ஷின் அளவு 20 PPB ஆக இருக்க வேண்டுமெனினும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அதன் அளவு 58 PPB முதல் 310 PPB வரை 4 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளை இணக்கஞ் செய்த போது 26 சதவீதம் முதல் 489 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

6.3 வருடாந்த அறிக்கை சபையில் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய PED/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் சபையின் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் வருடாந்த அறிக்கைகள் 2018 ஏப்ரல் 10 திகதி அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

6.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் கடந்த கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டியிருந்த போதிலும், இவ்வறிக்கை தினம் வரை சரிசெய்வதற்காக போதியளவு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(அ) சபையின் சட்டத்திற்கு திருத்தங்கள் சமர்ப்பிக்கும் படி 2012 அக்தோபர் 01 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பாக தெரிவுக் குழுவினால் கட்டளை வழங்கியிருந்ததுடன் அந்தக் கட்டளை இது வரை அமுல் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 நாரஹேன்பிடி விற்பனை நிலையத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 77,352 இற்கான, 2016 ஆண்டின் போது ஹெல்தி புட் உணவகத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 73,415 இற்கான மற்றும் தெஹிவளை விற்பனை நிலையத்தில் ஏற்பட்டிருந்த பண முறைகேடுகள் தொடர்பாக இந்த அறிக்கை திகதி வரை

அவற்றிற்கான ஆரம்ப விசாரணைகள் மற்றும் முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

	முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள்	அவதானிப்புக்கள்
(அ)	நிதி நிருவாகம்	பாதீட்டு கட்டுப்பாட்டின் மூலம் வருமானங்கள் மற்றும் செலவுகளை முகாமைத்துவப்படுத்தாமை.
(ஆ)	சொத்துக்கள் நிருவாகம்	வாகனங்களை முறைசார் விதமாக உரித்தாக்கியிருக்காமை
(இ)	பதவியணி நிருவாகம்	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்றி ஆட்சேர்த்தல்.
(ஈ)	செயற்திட்ட முகாமைத்துவம்	திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்தாமையால் செயற்திட்டங்கள் வினைதிறனுள்ள மற்றும் சிக்கனத் தன்மைப்படி நடாத்திச் செல்லாமை.
(உ)	கோவைகள் கட்டுப்பாடு	பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகைகள் கோவைகள் பேணப்படாமை.

டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)